**TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,**
**(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)**
**Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034.**

**Proceedings of the Chief Executive Officer, TNSRLM, Chennai 34.**
**Present: Tmt. S. Divyadharshini, I.A.S.**

**Proc.No. 2085/G1/2023** **Dated:13.04.2023**

Sub: TNSRLM – National Rural Livelihood Mission – Implementation of Annual Action Plan 2023-24 – Establishment of 100 Mathi Shops and Sales outlets (Kiosk) in major tourist places for promoting Self Help Groups Products -Instructions - issued - Reg.

Ref:
1. **Approved activities of** NRLM-AAP for the year 2023-24.
2. Announcement made by the Hon'ble Minister of Youth Welfare and Sports Development, Government of Tamil Nadu made on the floor of the assembly on 30.03.2023.

*****

**Order**

The Hon'ble Minister for Youth Welfare and Sports Department, Tamil Nadu made an announcement (No.9) on the floor of Tamil Nadu Legislative Assembly on 30.03.2023 for establishing MaTHi Kiosks.

**Announcement No.9**

100 MaTHi kiosks will be established in major tourist destinations for exhibition cum sale of SHG products at a cost of Rs.5.00 Crores.

**Preamble**

Tamil Nadu has become an important tourist destination both for National and International Tourists. In order to provide access to traditional and unique products produced by SHGs to the visiting tourists, MaTHi shops and sales outlet (kiosk) will be established at 100 tourist destinations across the State.

**Objectives**

- To give an opportunity to the Self Help Groups producers to have a sales outlet at important tourist destination.

- To provide new marketing avenues for the sale of SHG products.
- To market the SHG products under the unique 'Mathi'.

**Target**

To establish 100 MaTHi shops and sales outlets (kiosk) in 100 tourist destinations across the State.

**Eligible Criteria**

- Any member, who is an entrepreneur or involved in trading activity
- Any member from a Panchayat Level Federation (PLF)/ Self Help Group/ Producer Group/ Cluster
- Preference should be given to the members from the villages adjacent to tourist places or within the radius of 5 kms.
- The selection process of PLF/ SHG should be made as stated in the guidelines without any deviation.

**Training**

Training on standardization, packing, price fixing and digital transaction shall be given to the members establishing the MaTHi sales outlet at the tourist destinations.

**Fund Release**

An amount of Rs.5.00 crores will be sanctioned for establishing 100 MaTHi shops or sales outlet of which Rs.3.50 lakhs for establishing MaTHi shops, Rs.1.25 lakhs as revolving fund for working capital and Rs.0.25 lakhs for impart training.

**Monitoring**

- All records such as stock, sales and cash book should be maintained properly by the PLF/ SHGs The Block Manager should inspect the shops twice in a month and DSMS/ APOs should inspect the registers every month and record the fact funding submit the inspection report to the higher officials.
- The DMMUs should maintain a detail register of all the MaTHi Kiosk pertaining to the districts.
- The monthly sales of receipts and expenditure pertaining to Mathi Kiosk should be consolidated and submitted to TNCDW, Chennai before 5$^{th}$ of every month.

**Timeline**

The following timeline and instructions should be adhered to

- A committee should be formed under the Chairmanship of the Collector and Project Director, TNSRLM as the convenor
- The MaTHi shops/ sales outlet will be established in prominent tourist destinations with heavy footfall.
- The common design of MaTHi sales outlet will be given separately by SMMU.
- Selection of place and setting up of MaTHi shops/ sales outlet (kiosk) should be done within 30 days from issue of this Executive Order.

Encl: Guidelines

Sd/-
Managing Director/CEO
TNCDW/TNSRLM

//Forwarded by order//

Additional Director (LP)

**To**
The District Collector/ Chairman,
All Districts.

13/04/23

**Copy to:**

1. The Principal Secretary to Government,
   Rural Development and Panchayat Raj Department,
   Secretariat, Chennai-9
2. The Project Director
   District Mission Management Unit
   All districts (except Chennai)

## மதி அங்காடி (Mobile Kiosk)

**நோக்கம் :**

மகளிர் சுயஉதவிக்குழுக்களின் உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ் நாடு முழுவதும் உள்ள 100 முக்கிய சுற்றுலா தலங்களில் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் உற்பத்திப்பொருட்களை நேரடியாக விற்பனை செய்ய '**மதி அங்காடி**' அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் உற்பத்திப்பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு கிடைப்பதுடன் சுற்றுலா பயணிகளுக்கும் அங்குள்ள பொருட்கள் தரமாக குறைந்த விலையில் கிடைக்க வழி வகை செய்யப்படுகிறது.

**இடம் தேர்வு செய்யும் முறை :**

- மாவட்டத்தில் பொதுமக்கள் அதிகம் வருகை தரும் முக்கிய சுற்றுலா தலமாக/ வழிபாட்டு தலமாக இருத்தல் வேண்டும்.
- ஏற்கனவே மகளிர் திட்டம் மூலம் அங்காடி வைக்கப்படாத சுற்றுலா இடமாக பார்த்துக்கொள்ள வேண்டும்.
- அங்காடி அமைவிடம் சுற்றுலா தலத்தின் பிரதான பகுதியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- பொதுமக்கள் மற்றும் பயணிகள் வந்து செல்ல வசதியாக இருத்தல் வேண்டும்.
- அங்காடி அமைவிடம் முறையாக அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
- அங்காடி அமைப்பதற்கான இடம் கீழ்காணும் மாவட்ட அளவிலான குழு மூலம் தேர்வு செய்யப்பட வேண்டும்

| வ.எண் | அலுவலர் | குழு பொறுப்பு |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித்தலைவர் | தலைவர் |
| 2. | திட்ட இயக்குனர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், | ஒருங்கிணைப்பாளர் |

| | | |
|---|---|---|
| 3 | திட்ட இயக்குனர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் |
| 4 | மாவட்ட செயல் அலுவலர், தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் | உறுப்பினர் |
| 5 | மாவட்ட சுற்றுலா அலுவலர் | உறுப்பினர் |
| 6 | இணை ஆணையர்/ துணை ஆணையர், இந்து சமய அறநிலைய துறை | உறுப்பினர் |
| 7 | மாவட்ட வன அலுவலர் | உறுப்பினர் |
| 8 | மண்டல இயக்குனர், நகராட்சி நிர்வாகம் | உறுப்பினர் |
| 9 | ஆணையாளர், மாநகராட்சி | உறுப்பினர் |
| 10 | உதவி இயக்குனர் (பேரூராட்சிகள்) | உறுப்பினர் |
| 11 | உதவி இயக்குனர், கலை பண்பாட்டு துறை | உறுப்பினர் |
| 12 | நிர்வாக பொறியாளர், பொதுப்பணித்துறை | உறுப்பினர் |
| 13 | நிர்வாக பொறியாளர், மின்சார வாரியம் | உறுப்பினர் |

**வண்ணம் மற்றும் அமைப்பு**

- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட முறையிலேயே வண்ணங்கள், பெயர் பலகை மற்றும் வடிவம் இருத்தல் வேண்டும்.

**அங்காடி நடத்திடும் மகளிர் சுயஉதவிக்குழு தேர்வு செய்யும் முறை**

மகளிர் சுயஉதவிக்குழு தேர்வு செய்யும் முறை குறித்து விரிவான பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் பெற வேண்டும்.

- பெறப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் தேர்வு குழு மூலம் பரிசீலனை செய்து தகுதியான குழு/கூட்டமைப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பரிந்துரைக்க வேண்டும்.
- திட்ட இயக்குனர் - தலைவர்
- மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் - உறுப்பினர்
- உதவித்திட்ட அலுவலர் (வா) - உறுப்பினர்
- மேலாளர், மா.வ.வி.ச - ஒருங்கிணைப்பாளர்
- மாவட்ட வள பயிற்றுனர் (ப.சா) -உறுப்பினர்
- சம்பந்தப்பட்ட வட்டார மேலாளர்/ சமுதாய அமைப்பாளர் - உறுப்பினர்
- வட்டார ஒருங்கிணைப்பாளர் (வா) - உறுப்பினர்
- கூட்டமைப்பு பிரதிநிதி - உறுப்பினர்
- வட்டார வணிக வள மைய பிரதிநிதி - உறுப்பினர்

- அங்காடி அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதியில் உள்ள சுயஉதவிக்குழு/ கூட்டமைப்பை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும். தகுதி உள்ள சுயஉதவிக்குழுக்கள் இல்லை எனில் சம்பந்தப்பட்ட குழு கூட்டமைப்பு தீர்மானத்தின் அடிப்படையில் அருகாமையில் உள்ள வேறு மகளிர் குழுவினரை தேர்வு செய்யலாம்.
- தேர்வு செய்யப்படும் மகளிர் சுயஉதவிக்குழு, ஊராட்சி அளவிலான/ பகுதி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
- தேர்வு செய்யப்படும் சுயஉதவிக்குழு தேசிய ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இணையத்தில் பதிவு பெற்றிருத்தல் அவசியம்.
- பொருட்கள் உற்பத்தி / விற்பனையில் ஆர்வம் மற்றும் முன் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.
- மாற்றுதிறனாளி - நலிவுற்றோர் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

- சுயஉதவிக்குழு தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்று இருப்பதுடன் ஒரு வங்கிக்கடன் இணைப்பாவது பெற்று இருத்தல் வேண்டும்.
- சுயஉதவிக்குழு தொடங்கி ஓர் ஆண்டாவது பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- சுயஉதவிக்குழு மீது எந்தவித புகார்களும் இல்லை என்பதை சம்பந்தப்பட்ட வட்டார மேலாளர் / சமுதாய அமைப்பாளர் சான்றிதழ் வழங்க வேண்டும்.
- தேர்வு செய்யப்படும் சுயஉதவிக்குழு/கூட்டமைப்பிற்கு அங்காடி ஒதுக்கப்படுவதில்லை. அங்காடியின் உரிமை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்திடமே இருக்கும். அங்காடி நடத்துவதற்கான வாய்ப்பு மட்டும் 6 மாதங்களுக்கு வழங்கப்படும். பின்னர் சுழற்சி, விற்பனை மற்றும் திறன் அடிப்படையில் தொடர்ந்து அனுமதி வழங்கப்பட வேண்டும்.

**அங்காடிகளில் விற்பனைக்கு வைக்கப்பட வேண்டிய பொருட்கள் விபரம்**

- அங்காடி ஒதுக்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுவின் உற்பத்திப்பொருட்கள் மட்டுமல்லாது மாவட்டத்தில் உள்ள அனைத்து மகளிர் சுயஉதவிக்குழு முக்கிய உற்பத்திப்பொருட்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட வேண்டும்.
- தேவைக்கு ஏற்ப பிற மாவட்ட மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்திப்பொருட்களையும் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கலாம்.
- அனைத்து பொருட்களும் ”மதி” முத்திரையுடனேயே விற்பனை செய்யப்பட வேண்டும்.
- மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்க வழிகாட்டு நெறிமுறைகளின் படி பேக்கிங் மற்றும் லேபிளிங் இருத்தல் வேண்டும்.
- அனைத்து உணவுப்பொருட்களுக்கும் உணவு தரக்கட்டுபாட்டு துறை சான்று (FSSAI) பெற்று இருத்தல் வேண்டும்
- மகளிர் சுயஉதவிக்குழு தயாரிப்பு பொருட்கள் மட்டுமே விற்பனைக்கு வைத்திட வேண்டும்.

- மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்திப்பொருட்கள் நல்ல முறையில் இருப்பதையும் காலாவதி ஆகாமல் இருப்பதை உறுதி செய்திடவும் வேண்டும். காலாவதி மற்றும் நீண்ட நாட்களாக பொருட்கள் விற்பனை செய்யாமல் தேக்கி வைத்திருத்தல் கூடாது.
- அங்காடிக்கு தேவையான பொருட்கள் மாவட்டத்திற்கு உள்ளேயும் பிற மாவட்டத்திலிருந்தும் தொடர்ந்து தங்கு தடையின்றி கிடைப்பதை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் உறுதி செய்திடல் வேண்டும்.

**நிதி நிர்வாகம்:**

- ஒவ்வொரு நடமாடும் அங்காடிக்கும் தலா ரூ.5.00 இலட்சம் நிதி வழங்கப்படும். அதில் ரூ. 3.50 இலட்சம் அங்காடி அமைப்பதற்கும், ரூ.1.50 இலட்சம் மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்திப்பொருட்களை கொள்முதல் செய்வதற்கான சுழல்நிதியாகவும் பயன்படுத்த வேண்டும்.
- அங்காடி அமைப்பதற்கு ஊரக வாழ்வாதார இயக்க கொள்முதல் நடைமுறை விதிகளின் படி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மூலம் ரூ.3.50 இலட்சம் மிகாமல் பின்பற்றப்பட வேண்டும்.
- பொருட்கள் கொள்முதலுக்கான சுழல்நிதியாக ரூ.1.50 இலட்சம் அனுமதி வழங்கப்படும் குழுவிற்கு குறைந்த வட்டியில் கடனாக வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாதமும் இக்கடனை அசல் மற்றும் வட்டியுடன் சம்பந்தப்பட்ட மகளிர் சுயஉதவிக்குழு திருப்பி செலுத்துதல் வேண்டும்.
- அங்காடிக்கென தனி வங்கி கணக்கு பராமரிக்க வேண்டும். அதனை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் மற்றும் அங்காடி நடத்திடும் குழு பிரதிநிதி இணைந்து இயக்கிட வேண்டும். பிரதிமாதம் வரவு செலவு அறிக்கை உதவித்திட்ட அலுவலர் (வா) வழியாக திட்ட இயக்குனருக்கு சமர்ப்பித்திடல் வேண்டும்.
- பொருட்களுக்கான நிதி ரூ.1.50 இலட்சம் மேற்காணும் வங்கி கணக்கு வாயிலாகவே பயன்படுத்த வேண்டும்.
- இலாப பகிர்வு மற்றும் வட்டி வரவிலிருந்து மின்கட்டணம் உள்ளிட்ட பராமரிப்பு செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இலாப பகிர்வு அந்தந்த மாவட்டங்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாவட்ட அளவிலான குழு ஒப்புதலுடன் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும்.
- வழங்கப்படும் திட்ட நிதி முறையாக பயன்படுத்துவதை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர், உதவி திட்ட அலுவலர் (வா) மற்றும் திட்ட இயக்குனர் தொடர் கண்காணிப்பு செய்திட வேண்டும்.

**பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்**

- சொத்து விபர பதிவேடு
- பொருட்கள் இருப்பு பதிவேடு
- தினசரி விற்பனை பதிவேடு
- கடன் பேரேடு
- பொதுப்பேரேடு
- ரொக்க புத்தகம்
- வரவு செலவின சீட்டுகள்
- வங்கி புத்தகம்
- பொருட்கள் கொள்முதல் விபர பதிவேடு
- பார்வையாளர் பதிவேடு

**அங்காடி தொடர் கண்காணிப்பு**

- மகளிர் சுயஉதவிக்குழு சுழற்சியின் போதும், பிரதி மாத இறுதியிலும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் அனைத்து பதிவேடுகளையும் உண்மை தன்மையுடன் ஒத்திசைவு செய்து ஆய்வு செய்திட வேண்டும்
- பிரதி வாரம் வட்டார மேலாளரும் மாதத்திற்கு இரண்டு முறை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளரும், மாதத்திற்கு ஒரு முறை உதவித்திட்ட அலுவலரும் (வா) மூன்று மாதங்களுக்கு ஒரு முறை திட்ட இயக்குனரும் நேரில் கள மதிப்பாய்வு செய்திடல் வேண்டும்

**மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் பங்கு**

- அனைத்து மாவட்ட இயக்க மேலாண்மை அலகிலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து அங்காடிகள் குறித்த முழு விபர பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்.
- மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க கணினி பதிவாளர் தினசரி விற்பனை விபரங்களை தொகுத்து பிரதிவாரம் சம்பந்தப்பட்ட அலுவலர் வாயிலாக திட்ட இயக்குனருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
- பிரதிமாதம் அனைத்து அங்காடிகளிலிருந்தும் வரவு செலவு அறிக்கை பெற்று தொகுக்கப்பட வேண்டும்

**வாடிக்கையாளர் சேவை**

- அனைத்து அங்காடிகளிலும் புகார்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிக்க தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் மற்றும் தொலைபேசி எண் குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும்.
- தினசரி அங்காடி செயல்படும் நேரம் அனைவரும் பார்க்கும் வகையில் எழுதி வைத்திருத்தல் வேண்டும்
- அங்காடி நடத்திடும் மகளிர் சுயஉதவிக்குழு பெயர் மற்றும் தொலைபேசி எண் பலகையாக வைத்திடல் வேண்டும்.
- பொருட்கள் இருப்பு மற்றும் விலைப்பட்டியல் வைத்திருத்தல் வேண்டும்.
- ஆலோசனை மற்றும் புகார் பதிவேடு பராமரிக்க வேண்டும்.

ஓம்/-
மேலாண்மை இயக்குநர்

கூடுதல் இயக்குநர்
(வாழ்வாதாரம்)

13/04/23